# 14. தாவரங்களின் கடத்துதல் மற்றும் விலங்குகளின் சுற்றோட்டம்

I. **சரியான விடையைத் தேர்ந்தெடு.**

1. ஆற்றல் சார்ந்த கடத்துதலில் (செயல்மிகு கடத்துதல்) ____________.
   அ. மூலக்கூறுகள் செறிவு குறைவான பகுதியிலிருந்து செறிவு அதிகமான பகுதிக்கு இடம் பெயர்கிறது
   ஆ. ஆற்றல் செலவிடப்படுகிறது
   இ. அவை மேல்நோக்கி கடத்துதல் முறையாகும்
   ஈ. இவை அனைத்தும் **விடை:** ____________

2. வேரின் மூலம் உறிஞ்சப்பட்ட நீரானது தாவரத்தின் மேற்பகுதிக்கு இதன் மூலம் கடத்தப்படுகிறது ____________.
   அ. புறணி ஆ. புறத்தோல் இ. புளோயம் ஈ. சைலம்
   **விடை:** ____________

3. நீராவிப்போக்கின் பொழுது வெளியேற்றப்படுவது.
   அ. கார்பன் - டை- ஆக்சைடு ஆ. ஆக்ஸிஜன்
   இ. நீர் ஈ. இவை எதுவுமில்லை
   **விடை:** ____________

4. வேர்த் தூவிகளானது ஒரு
   அ. புறணி செல்லாகும் ஆ. புறத்தோலின் நீட்சியாகும்
   இ. ஒரு செல் அமைப்பாகும் ஈ. ஆ மற்றும் இ
   **விடை:** ____________

5. கீழ்க்கண்ட எந்த நிகழ்ச்சிக்கு ஆற்றல் தேவை.
   அ. செயல் மிகு கடத்துதல் (ஆற்றல் சார் கடத்துதல்) ஆ. பரவல்
   இ. சவ்வூடு பரவல் ஈ. இவை அனைத்தும்
   **விடை:** ____________

6. மனித இதயத்தின் சுவர் எதனால் ஆனது?
   அ. எண்டோகார்டியம் ஆ. எபிகார்டியம்
   இ. மையோகார்டியம் ஈ. மேற்கூறியவை அனைத்தும்
   **விடை:** ____________

7. இரத்த ஓட்டத்தின் சரியான வரிசை எது?
   அ. வெண்ட்ரிக்கிள் - ஏட்ரியம் - சிரை - தமனி ஆ. ஏட்ரியம் - வெண்ட்ரிக்கிள் - சிரை - தமனி
   இ. ஏட்ரியம் - வெண்ட்ரிக்கிள் - தமனி - சிரை ஈ. வெண்ட்ரிக்கிள் - சிரை - ஏட்ரியம் - தமனி
   **விடை:** ____________

8. விபத்து காரணமாக ‘O’ இரத்த வகையைச் சார்ந்த ஒருவருக்கு அதிக இரத்த இழப்பு ஏற்படுகிறது. இந்நிலையில் அவருக்கு எந்த இரத்த வகையை மருத்துவர் செலுத்துவார்?
   அ. ‘O’ வகை ஆ. ‘AB’ வகை இ. ‘A’ அல்லது ‘B’ வகை ஈ. அனைத்து வகை
   **விடை:** ____________

9. இதயத்தின் இதயம் என அழைக்கப்படுவது ____________.
   அ. SA கணு ஆ. AV கணு இ. பர்கின்ஜி இழைகள் ஈ. ஹிஸ் கற்றைகள்
   **விடை:** ____________